பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 08 திங்கட்கிழமை 23.12.2024 கதிர் 046

**இது ரகசியம் அல்ல!**

ஆட்சி மாறினாலும் முன்னாள் ஆட்சியாளர்கள்தான் மோசடியாளர்கள், ஊழல்வாதிகள் என்று குற்றச்சாட்டுக்களை அடுக்கினாலும் பிரச்சினைகள் ☞2

# தூய இலங்கை கருத்திட்டம் அச்சத்தை ஏற்படுத்துகின்றது

## அநுர மீது அம்பிகா கடும் விமர்சனம்





'தூய இலங்கை' என்ற கருத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணி அச்சத்தை ஏற்படுத்துகின்றது

என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கண்டித்துள்ளார்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் புதிய செயலணிக்கு மிகப்பரந்துபட்ட ஆணையும், அதிகாரங்களும் வழங்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் அவர், இந்நடவடிக்கை, முன்னாள் ஜனாதிபதியிலிருந்து அநுரகுமார ☞2

## எம்.பி. பதவியை நான் பங்குபோடமாட்டேன்

### பைசர் முஸ்தபா தெரிவிப்பு

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி மூலம் எனக்கு கிடைத்திருக்கும் ☞2

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதி பிரதமருடன் சந்திப்பு

இலங்கைப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிட தூதுக்குழுவின் இலங்கைக்கான ☞2

### 24 மணி நேரத்தில்

## 10 விபத்துக்களில் 13 பேர் உயிரிழப்பு

கடந்த 24 மணிநேரத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற 10 வீதி விபத்துக்களில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹட்டன், பின்னதுவ, மாரவில, அம்பலாந்தோட்டை, கம்பளை, ஹெட்டிபொல, மட்டக்களப்பு, மிரிஹான, கெப்பத்திகொல்லாவ மற்றும் சீதுவ ஆகிய பகுதிகளில் இந்த விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் ☞2

## 'எட்கா' ஒப்பந்தம் தொடர்பில் ஆளும்தரப்பு இரட்டைவேடம்

இந்தியாவுடனான 'எட்கா' ஒப்பந்தத்தில் ஆளும் தரப்புக்குள் இரட்டை நிலைப்பாடு காணப்படுகிறது. ஒப்பந்தம் குறித்து பேச்சில் ஈடுபடுவதாக ஒரு தரப்புக் குறிப்பிடுகின்ற நிலையில், ஒப்பந்தத்தை கைவிட தீர்மானித்துள்ளதாக பிறிதொரு தரப்பினர் குறிப்பிடுகின்றமை கவனிக்கத்தக்கது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சானக தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை பகுதியில் நேற்று நடைபெற்ற ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் ☞8

### கிலோவுக்கு ரூ. 65 என்ற

## அரிசி இறக்குமதி வரியை குறைக்கும்படி கோரிக்கை

அரிசி இறக்குமதியின் போது ஒரு கிலோ கிராம் அரிசிக்கு அறவிடப்படும் 65 ரூபாய் இறக்குமதி வரியைக் குறைக்குமாறு அரிசி இறக்குமதியாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

67,000 மெற்றிக் தொன் அரிசி ☞8

## மியன்மார் அகதிகளில் விடயத்தில் சுயலாப அரசியலுக்கு இடமில்லை

### பிரதி அமைச்சர் அருண் தெரிவிப்பு

மியன்மார் அகதிகள் விடயத்தை சுய அரசியல் இலாபத்துக்காக சிலர் அணுகி வருவதை நாம் எப்போதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகளை நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமனவுடன் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்ட விரோத குடிவரவாளர்களாக வருகைதந்துள்ள மியன்மார்-ரோஹிங்யா அகதிகளை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தேவையான உதவிகளை செய்து வருகிறோம். அந்த வகையில் அவர்களுக்கான உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம் உள்ளிட்ட தேவைகளை செய்து வருகிறோம்.

குறித்த அகதிகள் கடந்த வெள்ளியன்று திருகோணமலை துறைமுகத்துக்கு ☞8

## விவசாய உரம் சிறந்ததே அச்சப்பட தேவையில்லை

### ஆளும்தரப்பு தெளிவுபடுத்தல்

நெற்பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட உரம் (பொட்டாஷியம்) சிறந்த பயனைத் தரும் என்று தெளிவுபடுத்தியுள்ளது ஆளும்தரப்பு. வழக்கமாக அரசால் மானியமாக வழங்கப்படும் இந்த ☞8

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் குறித்து ஜனவரியில் அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் புதிதாக வேட்புமனுக்களை கோரும் வகையில் சட்டத்திருத்தம் அடுத்த மாதத்துக்குள் நிறைவேற்றப்பட்டால், பெப்ரவரி மாதமளவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்க முடியும். ஜனவரி முதல் வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.

சித்திரை புத்தாண்டுக்கு பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில் ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்தியுள்ளதை வரவேற்கிறோம். அரசமைப்பின் பிரகாரம் உரிய காலத்தில் தேர்தலை நடத்தவேண்டிய ☞2

## கடன் மீளளிப்புக்கான திட்டங்கள்தான் என்ன?

### ஆளும் தரப்பிடம் கேட்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 2028ஆம் ஆண்டாகும் போது 15 பில்லியன் டொலராக அதிகரிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அதே ஆண்டிலிருந்து நாம் கடனையும் மீளசெலுத்த ஆரம்பிக்கவேண்டும். இதற்காக ஆளும்தரப்பு நடைமுறைப்படுத்தவுள்ள ☞2

## பயணிகள் பேருந்துகளிலும் இன்று முதல் சோதனைகள்

நாடாளாவிய ரீதியில் இன்று முதல் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் உள்ளிட்ட ஏனைய வாகனங்களை சோதனையிடும் விசேட போக்குவரத்து நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் உள்ளிட்ட ஏனைய வாகனங்களால் இடம்பெறும் விபத்துக்களை கருத்திற்கொண்டு தொடர்ந்து இடம்பெறும் இவ்வாறான விபத்துக்களை குறைப்பதற்காக பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய இந்த போக்குவரத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நாளை முதல் பண்டிகைக்காலம் முடியும் வரை, நாடாளாவிய ரீதியில் நாடு முழுவதும் இந்த போக்குவரத்து நடவடிக்கை அமுல்படுத்தப்படவுள்ளது.

இதன்போது பிரதானமாக பொதுப் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் சோதனை செய்யப்படுவதுடன் அந்த பேருந்துகளின் சாரதிகள் குடிபோதையில் அல்லது போதைப்பொருளை பயன்படுத்தி செலுத்துகின்றனரா? என்பதும், தொடர்பிலும் சோதனையிடப்படவுள்ளது.

மேலும், பேருந்தை ☞2

## கிராமிய பொருளாதார வர்ச்சிக்கு ஆளும்தரப்பினால் 2025இல் திட்டம்

சர்வதேச ரீதியாக எந்த அங்கீகாரம் கிடைத்தாலும் மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என நாங்கள் நினைக்கின்றோம். ஆகவே 2025 ஆம் ஆண்டு பிரதான வேலைத்திட்டமாக கிராமிய பொருளாதாரங்களை வளர்ச்சிக்கான பணிகள் முன்னெடுப்படவுள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹெந்துநெத்தி தெரிவித்தார்.

வீழ்ச்சி அடைந்த பொருளாதார முறைமைக்கு எதிராக புதியதொரு பொருளாதார கொள்கையை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக மக்களின் கருத்துகளை அறியும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதான அலுவலகம் நேற்று மட்டக்களப்பில் திறந்துவைக்கப்பட்டது. கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹெந்துநெத்தி பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். ☞8

## இனி இது .....

மட்டும் இன்னும் தீர்க்கப்படாமலேயே தொடர்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்யது பெரும் பிரச்சினையாக இருந்தது. ஒருபுறம்மருந்துகளுக்குத்தட்டுப்பாடுமறுபுறம் தரமற்ற மருந்துகளின் பிரச்சினை என்பதாக இருந்தது. இதற்காகமுன்னாள்சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட அதிகாரிகள் பலரும் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டார்கள். ஆனால் பிரச்சினை ஆட்சி மாற்றத்தின் பின்னரும் தீர்ந்தபாடாக இல்லை.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 13 வகை மருந்துகள் முறையான தரமின்மை காரணமாக கடந்த இரண்டு வாரங்களுக்குள்பயன்பாட்டிலிருந்துவிலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாகவைத்தியர்கள்மற்றும் சிவில் உரிமைகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் எட்டு மருந்துகளும், இந்த வாரம் ஐந்து மருந்துகளும் இவ்வாறு அகற்றப்பட்டுள்ளதாகக் கூறும் அவர், பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட 8 மருந்துகள் தொடர்பாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தாம் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் குறிப்பிட்டார். இந்தத் தரமற்ற முரந்தை இப்போது யார் கொண்டுவந்தார்கள் என்று விசாரணை செய்யுமாறு அவர் கேட்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களில் மாத்திரம் இப்படித் தரமற்ற மருந்துகள் என்று சுமார் 300 மருந்துகள் பாவனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாகவும், நிமோனியா, மூளைக் காய்ச்சல் உள்ளிட்ட பல தொற்று நிலைமைகளுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளும் அவற்றுள் அடக்கம் என்றும் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

ஆக மொத்தத்தில் முன்னாள் சுகாதாரத்துறைஅமைச்சர்மற்றும்அதிகாரிகள் கைது செய்யப்பட்ட பின்னரும்கூட தரமற்ற மருந்துகளின் இறக்குமதி கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்பது உறுதியாகின்றது. ஆனால் இந்த மருந்துகளை இறக்குமதி செய்வதுதொடர்பில்பணியாற்றியஅதிகாரிகள் தொடர்பில் சுகாதார அமைச்சினால் முறையான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

முறைமை மாற்றம் (சிஸ்டம் சேஞ்ச) வந்த பின்னரும் இது விடயத்தில் மாற்றங்கள் எவையும் பிரதிபலிப்பாகவில்லை என்பது அவரது மேலதிக கவலை. ஆட்சிக்கு வரும் வரையில் ஒரு கதையும் வந்த பின்னர் வேறு கதைகளும் பேசும் இலங்கை அரசியலில் இவையெல்லாம்எதிர்பார்க்கமுடியாதவைகள் அல்லத்தானே!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தூய ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசநாயக்க மாறுபட்ட விதத்தில் செயற்படுவார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் ஆலோசனைக்கமைய 'தூய்மையான இலங்கை' கருத்திட்டத்தை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்காக அரசமைப்பின் 33 ஆவது உறுப்புரையின் பிரகாரம் 18 உறுப்பினர்களைக்கொண்ட ஜனாதிபதி செயலணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றைச்செய்திருக்கும் அம்பிகா சற்குணநாதன், 'தூய்மையான இலங்கை' கருத்திட்டத்துக்கென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்டிருக்கும் செயலணி பல்வேறு விதத்திலும் பிரச்சினைக்குரியதாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் இச்செயலணி அவருக்கு (ஜனாதிபதிக்கு) மாத்திரமே பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும், எமக்கு மற்றுமொரு செயலணியோ அல்லது ஆணைக்குழுவோ அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

''இச்செயலணிக்கு மிகப்பரந்துபட்ட அளவிலான ஆணையும், அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக இந்த ஜனாதிபதி செயலணிக்கு சட்டங்களைத் தயாரிப்பதற்கும், அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் அவசியமான கட்டமைப்பினை நிறுவுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஏனைய அரச கட்டமைப்புக்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு இச்செயலணிக்கு அதிகாரம் உண்டு" என்றும் அம்பிகா சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இந்த செயலணியில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் உள்வாங்கப்படாத நிலையில், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் பலர் இணைத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

"இவ்வாறானசெயற்பாடுகளேமுன்னைய ஜனாதிபதியினாலும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், தற்போதைய ஜனாதிபதி அவற்றிலிருந்து மாறுபட்ட விதத்தில் செயற்படுவார் என்ற நம்பிக்கையை இத்தீர்மானம் ஏற்படுத்தவில்லை. அத்தோடு இப்புதிய செயலணியில் சிறுபான்மையினப் பிரதிநிதித்துவமின்றி, இராணுவ அதிகாரிகள் உள்வாங்கப்பட்டிருப்பதானது பெரும்பான்மைவாத அரசு மற்றும் இராணுவ மயமாக்கல் தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்துகிறது" எனவும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

## ஆசிய ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் டகாபுமி கடோனோ (Takafumi Kadono) நேற்று பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தார்.

இலங்கையின் அபிவிருத்திச் செயன்முறையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் முக்கிய பங்கு குறித்து இந்த கலந்துரையாடலின் போது மீண்டும் வலியுறுத்தப்பட்டதுடன், இலங்கையின் தேசிய அபிவிருத்தி முன்னுரிமையான புதிய கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்ய பாடசாலைக் கட்டமைப்பு, அதிபர் ஆசிரியர் பயிற்சி மற்றும் மதிப்பீட்டு பொறிமுறைகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

அதிபர்ஆசிரியர்பயிற்சியைமேம்படுத்துதல் உட்பட,முன்னெடுக்கப்பட்டுவரும்திட்டங்களின் மூலம்கல்வித்துறையில்உள்ளசவால்களைத் தீர்ப்பதில் தங்கள் பங்களிப்பு குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் மேலும் கலந்துரையாடினர்.

இந்நிகழ்வில் இலங்கை பிரதிநிதிகள் குழுவில்பிரதமரின்செயலாளர்பிரதீப்சபுதந்திரி கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவே, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த, ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சமந்த பண்டார, ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவின் பதில் பணிப்பாளர் ரஞ்சித் கருசிங்க, நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் தனஞ்சி அமரசிங்க மற்றும் வெளிநாட்டு அமைச்சின் பொருளாதார விவகார பணிப்பாளர் லஷிங்கா தம்முல்லகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கடன் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலைத்திட்டம் என்ன என முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்திஸ்ஸஅத்தநாயக்க கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளதாக பிட்ச் ரேட்டிங் நிறுவனம் அறிவித்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். வங்குரோத்தடைந்தநாடுஎன்றமுத்திரையுடன் தொடர்ந்தும் பயணிக்க முடியாது.

சர்வதேசநாணயநிதியத்துடன்எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய செயற்பட்டதன் காரணமாகவே எம்மால் இந்த வெற்றியை அடைய முடிந்தது. அதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையிலான ஆளும்தரப்புக்கு நன்றி கூறவேண்டும்.

2028ஆம் ஆண்டாகும் போது எமது அந்நிய செலாவணி இருப்பு 15 பில்லியன் டொலராக அதிகரிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அதேயாண்டு வெளிநாட்டு கடனை மீள செலுத்தத் தொடங்கும் நிலையில் இந்த இலக்கை அடைய வேண்டியது அத்தியாவசியமானதாகும். எனவே இதற்கு ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் என்ன என்பது தொடர்பில் அறிய விரும்புகின்றோம்.

தேர்தலுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்த தேசிய மக்கள் சக்திக்கு தற்போது யதார்த்தமான சூழலை எதிர்கொள்ளவேண்டியேற்பட்டுள்ளது. ஆனால் பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி கோட்டாபய ராஜபக்ச ஆட்சி காலத்திலிருந்தே நாணய நிதியத்துடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தது.

ஆளும்தரப்பை வீழ்த்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தனியார் மயப்படுத்தல் என்ற வசனத்தை மிகப் பரவலாகப் பயன்படுத்தியது. தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்டவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோது தேசிய மக்கள் சக்தி அவற்றை கடுமையாக எதிர்த்தது. ஆனால் இன்று அவர்களுக்கு அதனை எதிர்க்க முடியுமா? உலகத்துடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதே யதார்த்தமாகும் என்றார்.

## எம்.பி ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியப் பட்டியல் எஜுயிஜுளுமன்ற உறுப்பினர் பதவியை யாருடனும் பங்கு போட்டுக்கொள்ளப்போவதில்லை. அவ்வாறான எந்த நிபந்தனையும் எனக்கு போடப்பவும் இல்லை என புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியுடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மேற்கொண்டிருந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்த கட்சிக்கு கிடைக்கப்பெற்ற இரண்டு தேசியப் பட்டியல் பதவியில் ஒன்று எனக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. தேசியப் பட்டியல் பதவியை எனக்கு வழங்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியே எனது பெயரை பரிந்துரை செய்திருந்தது. அதன் பிரகாரமே எனக்கு இந்த தேசியப்பட்டியல் கிடைக்கப்பெற்றது.

எனக்கு கிடைக்கப்பெற்ற தேசியப்பட்டியல் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு பின்னர் வேறு ஒரு உறுப்பினருக்கு வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடனே எனக்கு வழங்கப்பட்டுள்ளதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். அவ்வாறு எந்த நிபந்தனையும் எனக்கு விதிக்கப்படவில்லை. எனக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அடுத்துவரும் 5 வருடங்களுக்கு என்க்குரியதாகும். இதை யாருடனும் நான் பங்குபோடப்போவதில்லை.

அத்துடன்புதியஜனநாயகமுன்னணியுடன் 4 கட்சிகளே ஒப்பந்தம் செய்திருந்தன. அந்த கட்சிகளில் பெரும்பான்மையான கட்சிகள் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு எனது பெயரைப் பரிந்துரை செய்திருந்தன. அவ்வாறு இல்லாமல் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை பெற்றுக்கொள்ள நான் ஒருபோதும் போராடவில்லை. அந்த வகையில்எனக்குதேசியப்பட்டியல்உறுப்பினர் பதியை பெற்றுக்கொடுக்க பாடுபட்ட நிமல் சிறிபால டி சில்வா, துமிந்த திஸாநாயக்க, மஹிந்த அமரவீர ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பலவீனமடைந்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மீண்டும் பலப்படுத்துவதற்கான கட்சி மறுசீரமைப்பு நடவக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கேஸ் சிலிண்டருடன்கூட்டணிஅமைத்துக்கொண்டு போட்டியிட்டது. ஆனால்எதிர்வரும்காலங்களில் பாரிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்கே நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எப்போதும் கூட்டணி அமைத்தே மக்களின் ஆதரவுடன் பலமடைந்திருக்கிறது. அந்த இலக்கை அடைவதற்கே தற்போது மீண்டும் முயற்சித்து வருகிறோம். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உள்ளிட்ட முற்போக்கு கட்சிகளை இணைத்துக்கொண்டு எதிர்காலத்தில் அரச அதிகாரத்தை பெற்றுக்கொள்ளவதே எமது இலக்காகும்.

மக்கள் விடுதலை முன்னணி மிகவும் திட்டமிட்டு முற்போக்கான பயணத்தை மேற்கொண்டே அரச அதிகாரத்தை பெற்றுக்கொண்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தற்போது வீழ்ச்சியடைந்திருக்கிறது. என்றாலும் மீண்டும் எங்களுக்கு ஸ்திரமான நிலைக்கு வரமுடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம் என்றார்.

## 10 விபத்துக்களில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில்நான்குபாதசாரிகளும் அடங்குவதாகதெரிவிக்கப்படுகிறது.பண்டிகைக் காலங்களில் வீதிகளில் பயணிக்கும் போது அதிக கவனம் செலுத்த வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வருடம் வீதி விபத்துக்களில் 2,243 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை 22,967 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும் அதில் 2,141 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் வீதி விபத்துக்களில் படுகாயமடைந்தவர்களின் எண்ணிக்கை 4,552 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த நிலையில் நிதி மற்றும் இதர காரணிகளால் திட்டமிட்டதற்கமைய தேர்தலை நடத்த முடியாமல் போனது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு அவதானம் செலுத்தியிருந்த நிலையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. ஆகவே அரசியலமைப்பின் பிரகாரம் ஒரு மாத காலத்துக்குள் பொதுத்தேரதலை நடத்தினோம்.

பொதுத் தேர்தலைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்திருந்த நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து, புதிதாக வேட்புமனுக்களை கோருமாறு பல்வேறு தரப்பினர் வலியுறுத்தினர். ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் பிரகாரம் தேர்தலை நடத்துவதில் பல சிக்கல்கள் காணப்படுவது அவதானிக்க முடிகிறது.

கல்விப்பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் நிறைவடைந்தவுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து உறுதியான தீர்மானத்தை அறிவிப்பதாக ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இதற்கமைய ஜனவரி முதல் வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து அறிவிப்போம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக்களை கோரும் வகையில் சட்டமூலத்தை ஜனவரி மாதம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனவரி மாதமளவில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் பெப்ரவரி மாதமளவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்க முடியும் என்றார்.

## பயணிகள் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனக்குறைவாகவும், அபாயகரமாகவும் செலுத்துதல், அதிவேகத்தில் வாகனம் செலுத்துதல், போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் செலுத்துதல், பொருத்தமற்ற டயர் அல்லது பிற குறைபாடுகள் உள்ளதா? என சோதனை செய்து, அந்த சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேசமயம், மற்ற வாகனங்களிலும் சோதனை நடத்தப்படவுள்ளதுடன், அதற்காக, 24 மணி நேரமும் நாடு முழுவதும் போக்குவரத்து அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விசேட நடவடிக்கையின் போது, கவனக்குறைவாக அல்லது போக்குவரத்து விதிகளை மீறி இயங்கும் பேருந்துகள்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# மாவீரர் துயிலும் இல்லங்களை இனிமேல் பொறுப்பேற்கும் முன்னாள் போராளிகள்

## அரசியல் தலையீடுகளுக்கு இடமில்லை என அறிவிப்பு

மாவீரர் துயிலும் இல்லங்களில் அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் ஏற்பாட்டுக் குழு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு இணைந்த கலந்துரையாடல் நிகழ்வொன்று நடைபெற்றது.

இதில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மூன்று மாவீரர்களின் தாய்மாரை மாவீரர் நாளன்று பொதுச்சுடர் ஏற்றுவதற்கு அழைத்துவரப்பட்ட பின்னர், அவமதித்து வெளியே அனுப்பிய சம்பவம் தொடர்பாக இதன்போது பேசப்பட்டது.

இனி வரும் காலங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படுதல், மாவீரர் துயிலும் இல்லங்களில் அரசியல் தலையீடின்றி மாவீரர் நினைவேந்தல் அனுஷ்டிப்பது மற்றும் மூன்று மாவீரர்களின் தாய்மாரை அவமதித்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து, மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகத்தின் தலைவர் தேவராசா தீபன் ஊடக சந்திப்பொன்றை நடத்தினார்.

இதன்போது கருத்துரைத்த அவர் -

எதிர்வரும் காலத்தில் மாவீரர் நினைவேந்தல்களை தாம் பொறுப்பேற்று செய்வதாகவும் அதற்கேற்றவாறு தாம் நிர்வாகங்களை தெரிவு செய்து இனிவரும் காலங்களில் அரசியல் தலைவர்கள் இன்றி, முன்னாள் போராளிகள் தலைமைதாங்கி மாவீரர் நினைவேந்தலை நடத்தவுள்ளதாகவும் அதற்கு முன்னாயத்த கூட்டமாக இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது எனவும் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் யாரும் இந்த நிர்வாகத்தை எதிர்த்து செயற்பட்டால், அவற்றுக்கு முகங்கொடுத்து எமது பணிகளை திறம்பட நிறைவேற்றுவோம் எனவும் திட்டவட்டமாக அவர் கூறினார்.

# இராஜினாமாச் செய்திருந்தால் அதில் மாற்றம் இருக்கமுடியாது

## மாவை சேனாதிராசா குறித்து சுமந்திரன் கருத்து

மாவை சேனாதிராசா கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து இராஜினாமா செய்தால் அதில் மாற்றம் இருக்கமுடியாது. இராஜினாமாச் செய்துவிட்டு, இரண்டு மாதங்களின் பின்னர் அதனைத் திரும்பப் பெறுவதாகக் குறிப்பிட்டு முற்திகதியிடப்பட்ட கடிதத்தை அனுப்பிவைப்பதால் எந்தப் பயனுமில்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் மாவை சோ.சேனாதிராசா நீடிப்பதை அங்கீகரிப்பதா இல்லையா என்பது பற்றித் தீர்மானிக்கும் பொருட்டு டிசெம்பர் 28 வவுனியாவில் கூடவுள்ள கட்சியின் மத்திய செயற்குழுவில் வாக்கெடுப்பு நடத்துவதற்கு டிசெம்பர் 14 நடைபெற்ற மத்திய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் இதுபற்றிக் கருத்து வெளியிட்ட தமிழ் அசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ‘மாவை சேனாதிராசா இராஜினாமா செய்திருக்கிறார். அதனைக் கட்சியின் செயலாளர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் அதன் பின்னர் இராஜினாமாவைத் திரும்பப் பெறுகிறார் எனக் குறிப்பிட்டு முற்திகதியிடப்பட்ட கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கிறார்’ என்று சுட்டிக்காட்டினார்.

அதேவேளை ‘இராஜினாமா செய்தால் அதில் மாற்றம் இருக்கமுடியாது. இராஜினாமா செய்து இரண்டு மாதங்களின் பின்னர் அதனை வாபஸ் பெறுவதாகக் குறிப்பிட்டு முற்திகதியிடப்பட்ட கடிதத்தை அனுப்பிவைப்பதால் எந்தப் பயனுமில்லை’ எனவும் சுமந்திரன் தெரிவித்தார்.

# மூதூரில் ஒளி விழா

( ஹலால்தீன் )

மூதூர் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளிவிழா நிகழ்வு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலாளர் முபாரக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலய அதிபர் அருட் தந்தை கொன்பியூசியஸ் சமய வழிபாடுகள் நிகழ்த்தினார்.

மூதூர் புனித அந்தோனியார் ம.வி, மூதூர் இருதய ஆண்டவர் பாடசாலை ஆகியவற்றின் மாணவ மாணவிகள் மற்றும் மெதடிஸ்த பாலர் பாடசாலை மாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அறபாத், கணக்காளர் றினோஸ், நிருவாக உத்தியோகத்தர் திருமதி பரீது, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் கோடீஸ்வரி, புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை உதயன், மெதடிஸ்த திருட்சபை முகாமைக்குரு ராம்கி, திரு இருதய ஆண்டவர் வித்தியாலய அதிபர் அருட் சகோதரி நிவேதா, கார்மேல் சபை கன்னியர் இல்ல பொறுப்பாளர் அருட் சகோதரி விஜித்தா உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# இலங்கை தமிழ் அரசுக் கட்சியை சீரழிப்பதற்குச் சதிவலையாம்

## சந்தேகம் வெளியிடுகிறார் சிவஞானம்



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைசீரழிப்பதற்கு சதிவலை பின்னப்பட்டுள்ளதென்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது என்று அக்கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும், வடமாகாண தவிசாளருமான சிவஞானம் தெரிவித்துள்ளதோடு, கட்சிக்கு எதிராகத் தொடர்ச்சியாக வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதானது துரதிஷ்டவசமானது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக நான்கு வழக்குகள் இதுவரையில் தாக்கல்செய்யப்பட்டுள்ள நிலையில் அது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 75 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியாகும். தமிழர்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சியானது தற்போதும் அந்தப் பயணத்தில் தீவிரமாக உள்ளது.

ஆனால் துரதிஷ்டவசமாக கட்சிக்கு எதிராக தொடர்ச்சியாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையான நோக்கமானது, கட்சியை செயற்பாடுகளில் இருந்து ஓரம்கட்டுவதும், கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்துவதுமாகும்.

இதற்கு காரணங்கள் உள்ளன. இலங்கைத் தமிழரசுக் கட்சி தான் தற்போது தமிழ் மக்களின் அதிகளவான பிரதிநிதித்துவங்களை கொண்டுள்ள கட்சியாகும். தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்த வேண்டுமெனக் கருதுகின்ற உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் தமிழரசுக்கட்சியை அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதன் மூலம் தான் தங்களின் இலக்கினை அடைய முடியும்.

ஆகவே, இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கூட எட்டு ஆசனங்களை வடக்கு,கிழக்கில் வென்றெடுத்து தனது செல்வாக்கை நிரூபித்துள்ள தமிழரசுக்கட்சியை பலவீனப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, கட்சிக்குள் இருப்பவர்களையும், வெளியில் இருப்பவர்களையும் பயன்படுத்தி கட்சியை பலவீனப்படுத்துவதற்கு முனையும் தரப்புக்கள் பாரிய சதிவலையொன்றை பின்னியிருக்கின்றார்கள். இந்த விடயத்தை கட்சியின் ஒவ்வொறு உறுப்பினரும் புரிந்து கொள்ளுதல் அவசியமானது.

திரைமறைவில் மேற்கொள்ளப்படும் தமிழ்த்தேசிய எதிர்ப்பு சக்திகளின் சதிவலையை முறியடிப்பதற்கும், கட்சியை சிறப்பாக தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும் அனைத்து உறுப்பினர்களும் முரண்பாடுகளை களைந்து ஒன்றிணைய வேண்டியது அவசியமாகின்றது.

அத்துடன், நீதிமன்றத்தின் ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை முறையாக கையாண்டு கட்சியை நீதிமன்றத்திலிருந்து விடுவிக்க வேண்டியது அவசியமாகின்றது. - என்றார்.

# கிளிநொச்சியில் மோப்ப நாய்களுடன் வாகனங்களில் திடீரென சோதனைகள்



கிளிநொச்சி மாவட்டத்தில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் சனிக்கிழமை சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், வீதி ஒழுங்குகளை மீறுபவர்கள், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, மோப்ப நாய்களை வைத்து வாகனங்களை சோதனையிட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அவநம்பிக்கைகள்

இலங்கையில் புரையோடிப் போன அரசியல் கலாசாரத்தை மாற்றி, ஒட்டுமொத்த ஆட்சிப் பொறிமுறையையும் மாற்றத்தை (சிஸ்டம் சேஞ்ச்) நிகழ்த்தும் என்கிற எதிர் பார்ப்போடுதான் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்தார்கள். அதிலும் இதுவரை இல்லாத அளவில் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை விகிதாசாரப் பிரதிநித்துவத் தேர்தலின் கீழும் வழங்கினார்கள். அந்த மாற்றங்கள் நிகழும் என்கிற நம்பிக்கை தொடர்ந்து தளர்ந்து வருவதாகவே தெரிகின்றது.

முதலில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மாற்றியமைப்போம் என்கிற தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதியில் இருந்து அது சுறுகியது. அந்த ஒப்பந்தத்தின் காரணமாக மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமை குறைக்கப்படும் என்ற வாக்குறுதியும் காற்றில் பறந்தது. விலைவாசி உட்பட எதிலும் குறைவு ஏற்படவில்லை. வருமானமும் அதிகரிக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சித் தடத்திலேயே அரசுத் தலைவர் அநுரவின் பயணமும் தொடர்கின்றது என்று எதிர்க் கட்சிகள் விமர்சிக்கின்றன.

அண்மையில் அநுரவின் ஆட்சியைப் பற்றிக் கருத்துத் தெரிவித்திருந்த தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பதில் ஆளும்தரப்பு பின்வாங்குவது போல் தென்படுகின்றது என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கை தமிழ் அரசு கட்சி உறுப்பினர்கள் நோர்வே நாட்டுத் தூதுவர் மே–எலின் ஸ்ரெனரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இப்போது அரசுத் தலைவர் நியமித்துள்ள 'தூய சிறீலங்கா' திட்ட செயலணியும் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. இந்தக் குழுவில் தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை. புதிய செயலணிக்கு மிகப்பரந்துபட்ட ஆணையும், அதிகாரங்களும் வழங்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கும் மனித உரிமைகள் ஆர்வலரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவருமான அம்பிகா, இந்த நடவடிக்கை, முன்னாள் ஜனாதிபதியிலிருந்து அநுரகுமார திசநாயக்க மாறுபட்ட விதத்தில் செயற்படுவார் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை எனக் கண்டித்துள்ளார்.

"இச்செயலணிக்கு மிகப்பரந்துபட்ட அளவிலான ஆணையும், அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக இந்த ஜனாதிபதி செயலணிக்கு சட்டங்களைத் தயாரிப்பதற்கும், அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் அவசியமான கட்டமைப்பினை நிறுவுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஏனைய அரச கட்டமைப்புக்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு இச்செயலணிக்கு அதிகாரம் உண்டு" என்றும் அம்பிகா சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இந்த செயலணியில் தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் உள்வாங்கப்படாத நிலையில், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் பலர் இணைத்துக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

"இவ்வாறான செயற்பாடுகளே முன்னைய ஜனாதிபதியினாலும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், தற்போதைய ஜனாதிபதி அவற்றிலிருந்து மாறுபட்ட விதத்தில் செயற்படுவார் என்ற நம்பிக்கையை இத்தீர்மானம் ஏற்படுத்தவில்லை. அத்தோடு இப்புதிய செயலணியில் சிறுபான்மையினப் பிரதிநிதித்துவமின்றி, இராணுவ அதிகாரிகள் உள்வாங்கப்பட்டிருப்பதானது பெரும்பான்மைவாத அரசு மற்றும் இராணுவ மயமாக்கல் தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்துகிறது" எனவும் அம்பிகா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களிலும் அரசுத் தலைவர்கள் இவ்வாறே செயற்பட்டனர். ஜேவிபியின் சித்தாந்தங்களில் இருந்து அதன் மீது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எப்போதும் ஒரு சந்தேகம் இருந்து வருகின்றது. அதையும் தாண்டி மாற்றத்தை நோக்கியே அந்தக் கட்சிக்கு அவர்கள் வாக்களித்தார்கள். ஆனால் ஆளும்தரப்பின் தற்போதைய நடவடிக்கைகள் அவர்களின் சந்தேகத்தை மேலும் ஆழப்படுத்தும் வகையில் அமைந்திருப்பது வருந்தத்தக்கது.

இலங்கை பல்லின பல மத பன்மைத்துவத்தைக் கொண்ட ஒரு நாடு என்பதை தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தி புதிய இலங்கையை படைக்கும் என்கிற அவர்களின் வாக்குறுதி காற்றில் பறந்து பழைய இலங்கை மட்டுமே எஞ்சுமோ என்கிற அச்சமே எஞ்சுகின்றது. பழைய மொந்தையில் புதிய கள் மட்டுமே இந்த ஆட்சியோ என்கிற கவலைகளே மேலெழுகின்றன.



# உக்ரைனின் இலக்காகிய ரஷ்ய ஜெனரல் 43,000 உக்ரைன் வீரர்கள் இதுவரை இறப்பு

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

இரசாயன, உயிரியல் மற்றும் அணுசக்தி துருப்புகளுக்குப் பொறுப்பான ரஷ்ய ஜெனரல் லெப்டினன்ட் ஜெனரல் இகோர் கிரில்லோவ், நீண்ட காலமாக உக்ரேனிய படுகொலை இலக்காக இருந்தார். கடந்த வாரம் இகோர் கிரில்லோவ் மாஸ்கோ குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

மாஸ்கோவில், கிரெம்ளினில் இருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள புறநகரில் உள்ள ஒரு உயர்மட்ட அடுக்குமாடி குடியிருப்பின் நுழைவாயிலில் ஜெனரலும் அவரது உதவியாளரும் வெடித்துச் சிதறினர்.

சுமார் 300 கிராம் அதிநவீன வெடிபொருள் ஒரு இ–ஸ்கூட்டரின் இருக்கை வரை வயரிங் செய்யப்பட்டு ரேடியோ சிக்னல் மூலம் ரிமோட் மூலம் குண்டு தூண்டப்பட்டது.

உக்ரைனில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதற்காக ஜெனரல் மீது குற்றம் சாட்டப்பட்டதாக கீவ் அரசு அறிவித்து இருந்தது.

உக்ரைன் தனது இலக்குகளை கவனமாக தேர்ந்தெடுக்கப்பதாகத் தெரிகிறது. இந்த ஆண்டு ஒக்டோபரில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதற்காக ஜெனரல் இகோர் கிரில்லோவ் இங்கிலாந்திலும் பெயரிடப்பட்ட ரஷ்ய ராணுவ ஜெனரல் ஆவார்.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த சில மணிநேரங்



களில் உக்ரைனின் பாதுகாப்பு சேவை (SBU) மேற்கத்திய ஏஜென்சிகளிடம் ஜெனரலுக்கு எதிரான தாக்குதலில் தாங்களே ஈடுபட்டனர் என்று கூறியது. உக்ரைனிய உளவு சேவையின் தலைவரான லெப்டினன்ட் ஜெனரல் வாசில் மாலியுக் மேற்கத்திய ஊடகங்களுக்கு, உக்ரைனின் எதிரிகள் மொஸ்கோவில் தஞ்சம் புகுந்தவர்கள் உட்பட, ரஷ்யாவிற்கு உதவி செய்யும் உக்ரேனியர்கள் மற்றும் பிரிந்து சென்றவர்களுக்கு எதிராக ஒரு இரகசிய படுகொலை திட்டத்தை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஜெனரல் கிரில்லோவ் விளாடிமிர் புட்டினுடன் நெருக்கமாக இருப்பதாக அறியப்பட்டார். அவர் சந்தேகத்திற்கு இடமின்றி விரைவில் பழிவாங்கப்படுவார் என நம்பப்பட்டது.

### உக்ரைனின் படுகொலை இலக்குகள்:

உக்ரைனின் படுகொலைகளின் இலக்குகள் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. சில நாட்களுக்கு முன்பு ரஷ்யாவின் அடுத்த தலைமுறை கப்பல் ஏவுகணையின் கலைஞர் டாக்டர் மிகைல் ஷாட்ஸ்கியைக் கொன்றதாக உக்ரைன் பாதுகாப்புச் சேவை கூறியது.

புட்டினுக்கும் கிரெம்ளினுக்கும் இந்த நாட்கள் நல்லவை அல்ல என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். புடின் தனது கூட்டாளியும் சிரியாவின் சர்வாதிகாரியுமான அசாத்தின் ஆட்சியையும் இழந்துள்ளார்.

அத்துடன் சிரியாவில் உள்ள கடற்படை துறைமுகம் டார்டஸ் மற்றும் ஹ்மைமிமின் விமானதளத்தை இழக்கவும் வேண்டியுள்ளது. ரஷ்யா அவற்றை இழந்தால், செங்கடலில் உள்ள பெங்காசி மற்றும் போர்ட் சூடான் போன்ற பிராந்தியத்தில் உள்ள மற்ற தளங்களை அவர்கள் இழக்க நேரிடலாம்.

ரஷ்யாவின் நட்பு நாடான ஈரான் பெருமளவில் அடிபட்டுள்ளது. லெபனானில் உள்ள தனது ஆதரவு ஹெஸ்பொல்லா அமைப்பிற்கான விநியோக வழிகளை அது இழந்துவிட்டது. எப்படியும் பெய்ரூட்டில் உள்ள ஹெஸ்பொல்லா இயக்கத்தின் புதிய தலைமை அசாத் அரசை காப்பாற்ற மறுத்தது. முன்பு ஹெஸ்பொல்லா துருப்புக்களே அசாத் அரசிற்கு இவ்வளவு காலமாக முட்டுக் கொடுத்தனர்.

அதேவேளை அக்டோபர் மாத இறுதியில் இஸ்ரேல் நடத்திய பெரும் விமானத்தாக்குதலில் ஈரான் தனது ஏவுகணை தளங்களின் பெரும் பகுதியை இழந்தது.

### கிரிமியா - அசோவ் ( AZOV ) கடல் :

சோவியத் ஒன்றியம் சரிந்தபோது, கிரிமியாவை உக்ரைனுக்கு தார்மீகமாகக் கொடுத்தது. அங்குள்ள செவாஸ்டோபோல் ஆனது ரஷ்ய – சோவியத் ஒன்றியத்தின் ஒரே சூடான நீர் துறைமுகம் ஆகும்.

உக்ரைன் ரஷ்யாவின் நட்பு தேசமாக இருக்கும்வரை எல்லாமே நன்றாக இருந்தது. ஆனால் உக்ரைன் நேட்டோவில் இணைவதற்கான அறிகுறிகளைக் காட்டிய தருணத்தில், ரஷ்யா படையெடுக்க வேண்டியிருந்தது.

2014இல் ரஷ்யா கிரிமியாவைக்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# உக்ரைனின்....



4ம் பக்கத் தொடர்ச்சி..........

கைப்பற்றியதும், அதன் பின்புறத்தைப் பாதுகாக்க அசோவ் ( AZOV ) கடலைச் சுற்றியுள்ள அனைத்து எல்லை நிலங்களையும் கைப்பற்ற வேண்டி இருந்தது. இது அசோவ் கடலை வணிகம் மற்றும் பாதுகாப்பிற்காக ரஷ்யாவிற்குரியதாக மாற்றியது.

நிகழும் போரின் முடிவில் உக்ரைன் இறுதியாக ரஷ்யாவுடன் பேச்சு நடத்தும்போது, அனைவருக்கும் ஒரு விவகாரம் நன்றாக தெரியும். கிரிமியாவையும் அசோவ் கடலையும் ரஷ்யா ஒருபோதும் கைவிடாது என்பதாகும்.

பேச்சு மேசைக்குச் செல்வதற்கு முன், உக்ரைனும் அதன் நட்பு நாடுகளும் ரஷ்யா கேட்கும் விரும்பும் ஒரு முக்கிய விஷயமாக இருக்கும்.

### 43 ஆயிரம் உக்ரைன வீரர்கள் இறப்பு

ரஷ்யா போரில் 43 ஆயிரம் படையினர் உயிரிழந்துள்ளனர் என்றும் உக்ரைனுக்கு அமைதிவேண்டும் என்றும் ஜெலன்ஸ்கி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி பிரான்ஸ் நாட்டுக்குச் சென்று அந்நாட்டு தலைவரான இம்மானுவேல் மேக்ரானை நேரில் சந்தித்துப் பேசினார். அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ள டிரம்பும் பிரான்ஸ் சென்றார்.




ஜெலன்ஸ்கி செய்தியாளர்களிடம் கூறும்போது, உக்ரைனுக்கு நீடித்த அமைதிவேண்டும். கடந்த காலத்தில் ரஷ்யா அழிக்கும் செயலில் ஈடுபட்டது போன்று, வருங்காலத்தில் அமைதியைக் குலைக்கும் நோக்கில் ரஷ்யா ஈடுபடாத வகையிலான அமைதி மக்களுக்கு வேண்டும் என டிரம்பிடம் கூறினேன் என்றார்.

முடிவற்ற ஒன்றாகப் போர் இருக்கமுடியாது. அமைதி ஒன்றே நிரந்தரம் மற்றும் நம்பத்தக்க ஒன்றாக இருக்கும் எனக்கூறிய அவர், உக்ரைனின் 43 ஆயிரம் படையினர் போரில் உயிரிழந்துள்ளனர். 3 லட்சத்து 70 ஆயிரம் பேர் காயமடைந்து உள்ளனர். லட்சக்கணக்கானோர் புலம்பெயர்ந்து உள்ளனர் என கூறியுள்ளார். எனினும், போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுக்கு வர உக்ரைன் தயாராக இல்லை. அவர்கள் மறுத்து வருகின்றனர் என ரஷ்யா கூறி வருகிறது.

### 3ஆம் ஆண்டை நோக்கி போர்:

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரானது கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரியில் தொடங்கி, மூன்றாம் ஆண்டை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

தற்போது இரு நாடுகளும் போரை தீவிரப்படுத்தி உள்ளன. போரை முடிவுக்கு கொண்டு வரும் சர்வதேச தூதரக மற்றும் அமைதி பேச்சு இதில் பெரிய பயன் எதனையும் தரவில்லை.

உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றன. அந்நாடுகள் நிதி, இராணுவ உதவியை வழங்கி வருகின்றன. இந்நிலையில் ரஷ்யா தனது இராணுவப் பலத்தை அதிகரித்தும் வருகிறதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



காலைக்கதிர் Kalaikkathir

# ஆபிரிக்கப் பெரும் நத்தைகளை கட்டுப்படுத்தாவிடின் பேராபத்து

## சூழலியலாளர் ஐங்கரநேசன் எச்சரிக்கை

ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட பெரும் நத்தைகள் சமீபத்தில் பெய்த பெருமழையின் பின்னர் பல பகுதிகளில் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. இவற்றை இப்போதே கட்டுப்படுத்தத்தவறின் விரைவில் பேராபத்துகளை விளைவிப்பவையாக இவை அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

ஆபிரிக்க நத்தைகள் தொடர்பாக நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் (African Giant Snail- Lissachtina fulica) பிரித்தானியர் ஒருவரால் பின்விபரீதங்கள் புரியாமல் இலங்கைக்குள் எடுத்துவரப்பட்ட ஓர் அந்நிய இனம். ஒரு நத்தையிலேயே ஆண், பெண் இனப்பெருக்க அமைப்புகள் இரண்டும் இருப்பதால் இரண்டு நத்தைகள் சோடி சேரும்போது இரண்டுமே முட்டைகளை உருவாக்குகின்றன. சராசரியாக 5 தொடங்கி 6 ஆண்டுகள் வரை வாழுகின்ற ஒரு நத்தை தன் ஆயுளில் 1000க்கும் அதிகமான முட்டைகளை இடுகின்றது. அந்நிய இனமான இவற்றை இரையாக்க இலங்கையின் இயற்கைச் சூழலில் இரைகௌவிகள் எதுவும் இல்லை. இதனால் பல்கிப்பெருகி இப்போது ஓர் ஆக்கிரமிப்பு இனமாக உருவெடுத்துள்ளது.

உலகின் உயிர்ப்பல்வகைமையின் அழிவுக்கு அந்நிய ஊடுருவல் இனங்களும் ஒரு பெருங்காரணமாக உள்ளன. பகலில் மறைந்திருந்துவிட்டு இரவில் இரைதேடும் ஆபிரிக்க நத்தைகள் பயிர்கள், அலங்காரச் செடிகள், புல்பூண்டுகள் என்று எல்லாவற்றையும் தின்று தீர்த்து வருகின்றன. ஒரு தாவரத்தில் உள்ள நோய்க்கிருமிகளை இன்னொரு தாவரத்துக்குக் காவிச் செல்கின்றன. இவற்றோடு மனிதர்களில் மூளைமென்சவ்வு அழற்சியை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிப் புழுக்களை இவை காவித்திரிவதும் அறியப்பட்டுள்ளது. ஆபிரிக்க நத்தைகள் பயிர்ச்செய்கைக்கும், உயிர்ப்பல்வகைமைக்கும் அச்சுறுத்தலாக இருப்பதால் இலங்கை ஆளும்தரப்பு இதனை அந்நிய ஊடுருவல் இனமாக அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் திணைக்களங்களுக்காகக் காத்திராமல் பொதுஅமைப்புகளும், பொதுமக்களும் முன்வரவேண்டும். உப்பு நீர்க்கரைசல் உள்ள பாத்திரம் ஒன்றில் இவற்றை அமிழ்த்துவதன் மூலம் இவற்றைச் சுலபமாக அழிக்க முடியும். ஆபிரிக்க நத்தைகள் நோய்க்காவிகளாகவும் இருப்பதால் வெறும்கைகளால் நேரடியாகத் தொடாமல் இலைகள், கடதாசிகள் போன்றவற்றால் இவற்றைப் பிடிப்பதே பாதுகாப்பானது. இதனை ஒரு சமூகக் கடமையாகக் கருதி நாம் விரைந்து செயற்படவில்லையெனில் ஏற்கனவே பெரும் பொருளாதாரச் சீரழிவுக்கும், சுற்றுச்சூழல்சீர்கேட்டுக்கும் ஆளாகியிருக்கும் இலங்கை இந்நத்தையாலும் பெரும் சீரழிவுகளைச் சந்திக்கநேரும் - என்று எச்சரித்தார்.

# 23 கணித பாட ஆசிரியர்களுக்கு வவுனியா தெற்கில் பற்றாக்குறை

வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா தெற்கு வலய செயலாளர் கிருஸ்ணகோபால் வசந்தரூபன் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் தற்போதும் பல பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய, ஆசிரியர் இடமாற்றங்கள்மற்றும்நியமனங்களின்போது வடக்கு மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக23கணிதபாடஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. 2 விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை இருக்கின்றது. அத்துடன் தகவல் தொடர்பாடல்தொழில்நுட்ப பாடத்திற்கு 7 ஆசிரியர்கள் தேவையாக உள்ளது.

முக்கியமான பாடத்துறைகளில் நிலவும் இவ்வாறான ஆசிரியர்பற்றாக்குறையானது மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியுளளது. எனவே, தற்போது வட மாகாணத்தில் வழகங்கப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றங்களின்போது இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும் - என்றுள்ளது. (100)

# புத்தளத்தில் நத்தார் விழா

(சியாஜ்)

இலங்கைதேசியசமாதானப்பேரவையின் அனுசரணையுடன் புத்தளம் மாவட்ட சர்வ மதக் குழுவின் ஏற்பாட்டில் புத்தளம் சாந்த மரியா தேவாலாயத்தின் வளாகத்தில் சனிக்கிழமை பகல் நத்தார் விழா நடைபெற்றது.

இதில் சர்வ மதத் தலைவர்கள் கலந்துகொண்டு ஆசிவழங்கியதுடன் நத்தார் கொண்டாட்டங்களிலும் கலந்துகொண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சாந்த மரியா அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

அறநெறி மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

# அறநெறி மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருதுகள்





(கார்த்திகேசு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில் இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்துப்பட்ட 2023 ஆண்டு தேசிய ஆக்கத்திறன்போட்டியில் வெற்றி பெற்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களைக் கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது

புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வுவானது கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மிக சிறப்பாக இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தசாசன மத கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சனில் செனவி கலந்துகொண்டார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் விசேட மலர் ஒன்றும் அமைச்சரால் வெளியீட்டு வைக்கப்பட்டது. தேசிய ஆக்கத்திறன் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு அமைச்சர் விருதுகளையும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுப் பொதிகளையும் வழங்கி வைத்துச் சிறப்புரை ஒன்றினையும் ஆற்றியிருந்தார்.

இந்நிகழ்வில் ஆன்மீக அதிதிகளாக இந்து சமய நிறுவனங்களின் சுவாமிகள் மற்றும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அனிருத்திரன் ஆகியோரும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அதிகாரிகள் மாவட்ட பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கையின் வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்த அரச நிறுவன அதிகாரிகள் கல்வியாளர்கள் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டனர்.

# முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

## தொழிற் சங்கம் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண சபையில் உள்ள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஏ ஜி முபாரக், கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் -

சுமார் 350 வெற்றிடங்கள் நிலவுவதாகவும் இதில் 30 வீதம் தற்போது சிறு பணியாளர்களாக கொண்டவர்களைக் கொண்டு நிரப்புதல் வேண்டும் என்றும், இது அவர்களின் பதவி உயர்விற்கான ஒரு வாய்ப்பாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு கடந்த மாதம் பரீட்சை நடத்தி பெறுபேறுகளை வெளியிட்டுள்ளமையும் இதற்கு முன்பு ஒரு தடவையும் ஆள்கள் சேர்க்கப்பட்டுள்ளதையும், வேறு மாகாணங்களிலும் ஆள்கள் சேர்க்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி கிழக்கில் ஆள்கள் சேர்க்கப்படாததையும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அதில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடம் நிரப்பப்படாததால் சேவையில் உள்ளவர்கள் இடமாற்றம் பெறுவதற்கு தடங்கலாக இருப்பதுவும், வேலைப் பழு அதிகரித்திருப்பதுவும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# புதிய வகுப்பறைக் கட்டடம் பெற்றது கட்டுகஸ்தோட்டை முஸ்லிம் வித்தி.

(கிஷாந்தன்)

குவைத் அரசின் அல் நஜாத் அமைப்பு மற்றும் அல் நூர் தொண்டு நிறுவனம் என்பவற்றின் நிதி உதவியின் ஊடாக கண்டி கட்டுகஸ்தோட்டை என்ரூதென்ன முஸ்லிம் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது. சுமார் பத்து மில்லியனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டப்பட்ட இந்தக் கட்டடம், நான்கு வகுப்பறைகளையும் காரியாலயத்தையும் கொண்டது. மூன்று மாடிகளை நிறுவக்கூடிய அடித்தளக் கட்டமைப்போடு இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் உறுப்பினரான பாரத் அருள்சாமியின் வேண்டுகோளுக்கமைய இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது. அவரது தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் குவைத் அரசின் அல் நஜாத் அமைப்பின் தலைவர் ஷேக் அப்துல்லா அலோபாய்டிலி, அல்லூர் அறக்கட்டளையின் தலைவர் அலியார், பாடசாலை அதிபர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

## பாலியல் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 பேர் கைது

### வவுனியாவில் சம்பவம்

வவுனியாவில் பாலியல் தொழிலில் ஈடுபட்ட 3 பெண்களைத் தாம் கைது செய்துள்ளனர் என்று மாவட்ட மது ஒழிப்பு பிரிவு பொலிசார் நேற்றுத் தெரிவித்தனர்.

திடீர் சோதனையின் போது தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இருந்து இந்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களாவர். அவர்கள் சுந்தரபுரம், குழுமாட்டு சந்தி, கல்மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

(100)

## வீரச்சோலையில் கசிப்பு வேட்டை

(பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சவளைக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரச்சோலையில் உள்ள பகுதியில் பல காலமாக சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் சனிக்கிழமை இரவு 8 மணியளவில் சம்மாந்துறை விசேட அதிரடிப் படையினரினால் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். சம்மாந்துறை, வீரமுனை 3 பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் ஒருவரேகைது செய்யப்பட்டவராவார்.

சந்தேகநபரிடம் இருந்து 80,000 மில்லி லிட்டர் கசிப்பு, 170,000 மில்லி லிட்டர் கோடா, 130,000 மில்லி லிட்டர் வடி, 210 லிட்டர் இரும்பு பரள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. சுமார் ரூபாய் இரண்டு லட்சத்திற்கு அதிக பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் சவளைக்கடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## நோன்பு காலத்தில் பரீட்சை நடத்துவது அசௌகரியம்

### அல் மீஸான் பௌண்டேஷன் கருத்து

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிங்களின் புனித நோன்பு காலமான மார்ச் மாதத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நடத்துவது அசௌகரியமானது என்று அல் மீஸான் பௌண்டேஷன் தெரிவித்துள்ளது.

இப்பரீட்சையை நோன்பு ஆரம்பிக்க முன்னர் அல்லது நோன்பு பெருநாள் முடிந்த பின்னர் நடத்த ஆளும்தரப்பு முன்வரவேண்டும் என அல்- மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா ஜனாதிபதி, கல்வி அமைச்சராக உள்ள பிரதமர், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பரீட்சை திணைக்கள அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இது தொடர்பாக பௌண்டேஷன் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகில் வாழும் இஸ்லாமியர்களின் புனிதமிகு மாதங்களில் ஒன்றான புனித ரமழான் என்பது அமல்கள் நிறைந்த மாத மாகும். இந்த மாதத்தில் 13 மணித்தியாலயங்களுக்கு மேலாக பகல் நேரங்களில் முஸ்லிங்கள் நோன்பு நோற்றிருப்பதுடன் பகலிலும், இரவிலும் இறைவனை அதிகம் அதிகம் தொழும் மாதமாகும். அருட்கொடைகள் நிறைந்த இந்த மாதத்தில் முஸ்லிங்கள் நிறைய நன்மையான காரியங்களை செய்வதுடன் இரவு நேரத்திலும் நீண்ட நேரம் நின்று தொழும் காலமாகும். இந்த காலத்தில் பள்ளிவாசல்கள் சகலதிலும் மார்க்க சொற்பொழிவுகளும், வணக்க வழிபாடுகளிலும் மக்கள் ஈடுபடுவார்கள்.

இப்படியான சங்கை மிகுந்த காலத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை நடத்த பரீட்சை திணைக்களம் தீர்மானித்திருப்பது பொருத்தமற்ற செயலாக அமைந்துள்ளது என்ற விடயம் இப்போது முஸ்லிங்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியிருக்கிறது. பரீட்சை எழுதும் முஸ்லிம் மாணவர்களும், பரீட்சை கடமைக்கு செல்லும் முஸ்லிம் உத்தியோகத்தர்களும் நோன்பு காலங்களில் பரீட்சையை எதிர்கொள்வதும் பரீட்சைக்கு தயாராவதும் உடலியல் ரீதியாக மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும், மார்க்க கடமைகளிலும் தாக்கம் செலுத்த வாய்ப்புள்ளது.

இதனால் இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிங்களின் உணர்வுகளை மதித்து இலங்கை முஸ்லிங்களின் மார்க்கக்கடமைகளையும், கல்வி நடவடிக்கைகளையும் திருப்த்திகாரமாக முன்னெடுக்க இந்த பரீட்சை நேரசூசியில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கமும், குறித்த துறைக்கு பொறுப்பான திணைக்களங்களும் முன்வரவேண்டும் என்பதுடன் முஸ்லிம் கட்சிகள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தை பிரநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் கரிசனை செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வவுனியாவில் அதிக பனிமூட்டம் வாகனச் சாரதிகள் பெரும் அவதி

வவுனியாவில் அண்மைய நாட்களை விடவும் நேற்று பனிமூட்டம் அதிகமாகக் காணப்பட்டது. இதனால் போக்குவரத்தை மேற்கொள்வதில் வாகன சாரதிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக ஏ 9 வீதி மற்றும் மன்னார் வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் காலையிலும் ஒளியைப் பாய்ச்சியபடி செல்லவேண்டி இருந்தது.

(100)



காலைக்கதிர் Kalaikkathir

## பயணிகள்....

### (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பிற வாகனங்கள் தொடர்பாக 119 மற்றும் 1997 ஆகிய குறுகிய தொலைபேசி இலக்கங்களுக்கு பொதுமக்கள் தகவல் வழங்க முடியும்.

மேலும், சம்பந்தப்பட்ட பகுதியின் பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான அதிகாரியின் கையடக்க தொலைபேசி இலக்கம் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய போக்குவரத்து பிரிவுகளுக்கு பொறுப்பான அதிகாரிகளின் கையடக்க தொலைபேசி இலக்கங்களுக்கும் தகவல்களை வழங்க முடியும்.

அத்துடன், போக்குவரத்து விதிகளை மீறுவது அல்லது பிற குற்றங்கள் தொடர்பான வீடியோக்கள் இருந்தால், அந்த வீடியோக்களை அந்த தொலைபேசி எண்களுக்கு வட்ஸ்அப் மூலம் அனுப்பவும் முடியும். அந்த தகவல்களின்படி, சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

அந்தந்தப் பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு.

மாத்தறை - 0718591433
காலி - 0718591452
எல்பிட்டிய - 0718591472
தங்காலை - 0718591488
புத்தளம் - 0718591289
சிலாபம் - 0718591304
குளியாபிட்டிய - 0718591260
நிகவெரட்டிய - 0718591274
குருநாகல் - 0718591244
கண்டி - 0718591042
தெல்தெனிய - 0718592274
மாத்தளை - 0718591079
கம்பளை - 0718591070
நுவரெலியா - 0718591094
ஹட்டன் - 0718591114
இரத்தினபுரி - 0718591382
கேகாலை - 0718591410
சீதாவகபுர - 0718591423
எம்பிலிபிட்டிய - 0718591392
கந்தளாய் - 0718591187
அம்பாறை - 0718591145
மட்டக்களப்பு - 0718591127
திருகோணமலை - 0718591170
காங்கேசன்துறை - 0718591315
யாழ்ப்பாணம் - 0718591327
வவுனியா - 0718591340
மன்னார் - 0718591363
கிளிநொச்சி - 0718591347
முல்லைத்தீவு - 0718591374
மொனராகலை - 0718591533
பண்டாரவளை - 0718591520
பதுளை - 0718591508
கெபதிகொல்லேவ - 0718592902
பொலன்னறுவை - 0718591230
அனுராதபுரம் - 0718591200
களுத்துறை - 0718591688
பாணந்துறை - 0718591674
களனி - 0718591589

பணிப்பாளர் கொழும்பு மாநகர போக்குவரத்து பிரிவு - 071 8591741

பணிப்பாளர் போக்குவரத்து தலைமையகம் - 071 8591967

பணிப்பாளர் மேல் மாகாண வடக்கு போக்குவரத்து பிரிவு - 071 8592857

பணிப்பாளர் மேல் மாகாண தெற்கு போக்குவரத்து பிரிவு - 071 8592278

## எட்கா ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டதற்கு முரணாகவே தற்போது செயற்படுகிறார். ஆட்சிக்கு வந்தவுடன் இந்தியாவின் அதானி குழுமத்துடனான ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதாக குறிப்பிட்டார். ஆனால் தற்போது அதானி குழுமம் விவகாரம் மறக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடனான எட்கா உட்பட சர்ச்சைக்குரிய ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் இந்தியப் பயணத்தின் பின்னர் எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவது பற்றி பேசுவதாக ஆளும்தரப்பு குறிப்பிடுகிறது. எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து 2008 ஆம் ஆண்டு முதல் குறிப்பிடப்பட்டு, கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியும் கடந்த காலங்களில் எட்கா ஒப்பந்தத்துக்கு எதிராக போர் கொடி உயர்த்தியது.

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் தொடர்பில் ஆளும்தரப்புக்குள் இரட்டை நிலைப்பாடு காணப்படுகிறது. ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாக ஆளும்தரப்பு குறிப்பிடுகின்ற நிலையில், ஒப்பந்தத்தை கைவிட தீர்மானித்துள்ளதாக பிறிதொரு தரப்பினர் குறிப்பிடுகின்றமை கவனிக்கத்தக்கது. ஆகவே ஆளும்தரப்பு இவ்விடயத்தில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும்.

நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை. நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் தேசியத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறார்கள் என்பதை ஆளும்தரப்பு நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும் -என்றார்.

## மியன்மார்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரப்பட்டனர். உடனடியாக அங்கே நடமாடும் மருத்துவ முகாமினை மேற்கொண்டிருந்தோம்.

பின்னர் சட்டத்தின் முன் இவர்கள் நிறுத்தப்பட்டார்கள். சட்டத்தின் பிரகாரம், மாலுமிகள் 12 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஏனைய 103 பேரும் தற்போது ஜமாலியா பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த விடயத்தை சுகாதார துறையினர், நிர்வாகத்துறையினர், பாதுகாப்புத் தரப்பினர், வெளிவிவகார அமைச்சு உட்பட பல துறை சார்ந்தவர்கள் ஒன்றாக இயங்கி வருகிறார்கள்.

ஆனால் சிலர் இந்த விடயத்தை தங்கள் சுய அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்தி வருவதை நாம் எப்போதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.ஒரு பெரும் விடயத்தை நாம் முன்னெடுத்துவருகின்றோம். இந்த வேளையிலே ஒருசில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும்.

நாட்டைப் பொறுத்தவரையிலும் திருகோணமலையை பொறுத்தவரையிலும் இது புதிய அனுபவம். இந்த விடயத்தை அணுகுவதற்கான ஒட்டுமொத்த அம்சங்களை இந்த ஆளும்தரப்புக் கொண்டிருக்கின்றது. அத்துடன் மிகவும் சிறப்பாக அனைத்து விதத்திலும் அணுகி வருகின்றது. ஆனாலும் தமது அரசியல் இலாபத்தினை கருத்தில் கொண்டு ஒரு சிலர் இதனை வைத்து அரசியல் பிழைப்பு வாதத்தை மேற்கொள்ள விரும்புவார்களாக இருந்தால் அதனை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அத்துடன் நீங்கள் ஏதாவது உதவிகள் செய்ய விரும்பினால் மாவட்ட செயலாளர் ஊடாகவோ அல்லது பிரதேச செயலாளர் ஊடாகவோ செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விவசாய ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரம் சிவப்பு நிறத்தில் இருக்கும். இம்முறை அது வெள்ளை நிறமாக இருக்கிறது. இதனால் இந்த உரம் நல்லதுதானா என்கிற சந்தேகம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது

ரஷ்ய அரசாங்க நிறுவனம் ஒன்றினால் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 'மியுரேட் ஒப் பொட்டாஸ்' அல்லது ரீஓபி (வீநுஊண) உரம் குறித்த இந்தத் தெளிவுபடுத்தலை விவசாய, கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு வெளியிட்டுள்ளது.

உரக் களஞ்சியத்தின் நிறம் தொடர்பில் விவசாயிகளுக்கும் விவசாய அமைப்புக்களுக்கும் இடையில் சிலபேச்சுக்கள் இடம்பெற்றதுடன், இது தொடர்பில் அமைச்சின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது.

இதன்படி, இறக்குமதி செய்யப்பட்ட உரத்தின் கலவை மற்றும் ஏனைய தரங்களை பரிசோதித்த பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் உரம் கையிருப்பு முறையான தரத்தில் இருப்பது தெரியவந்துள்ளது.

அதன் தாது உப்புகளை வைத்து உரத்தின் நிறம் தீர்மானிக்கப்படுவதாக தெரியவிக்கப்படுகிறது.

இரும்பு ஒக்சைட் இருக்கும்போது அதன் நிறம் சிவப்பு என்றும், இல்லாத போது வெண்மை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரங்களின் செயல்திறனில் எந்த மாற்றமும் இல்லை மற்றும் அதே அளவு பொட்டாசியத்தை வழங்குகின்றன.

இந்த உரத்தின் தரம் தொடர்பில் ஆராய்ந்த விவசாய அமைச்சின் மண் தொடர்பான விசேட நிபுணர் ரேணுகா சில்வா, அந்த உரம் தரமானது என உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன் காரணமாக தேவையற்ற அச்சமின்றி உரங்களை பயன்படுத்த முடியும் என அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரிசி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு குறுகிய காலத் தீர்வாக ஆளும்தரப்பு இந்தியாவில் இருந்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கியது, அரிசி இறக்குமதி மீது விதிக்கப்பட்டிருந்த வரையறை இரத்துச் செய்யப்பட்டதுடன், தனியார் அரிசி இறக்குமதியாளர்கள் அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய டிசெம்பர் 10 முதல் 20 (டிசெம்பர்) வரையான காலப்பகுதியில் தனியார் அரிசி இறக்குமதியாளர்கள் 67 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 38,500 மெற்றிக் தொன் நாடு அரிசியும், 28,500 மெற்றிக் தொன் பச்சை அரிசியும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அரிசி இறக்குமதியின்போது ஒரு கிலோ கிராம் அரிசிக்கு அறவிடப்படும் 65 ரூபாய் வரியை குறைக்குமாறு அரிசி இறக்குமதியாளர்கள் ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றனர். வரியைக் குறைத்தால் அரிசியைக் கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகிக்க முடியும் என்று இறக்குமதியாளர்கள் வர்த்தகம், உணவு பாதுகாப்பு அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அரிசி இறக்குமதிக்காக தனியார் துறையினருக்கு வழங்கப்பட்ட காலவகாசம் எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதுடன், அரிசி இறக்குமதி ஊடான வரி வருமானமாக 4.3 பில்லியன் ரூபா பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## கிராமிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டம் உட்பட நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட மக்களும் இணைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை எங்களுக்கு தந்திருக்கின்றார்கள்.

இந்த நாட்டு மக்கள் முக்கியமான ஒரு வரத்தை எங்களுக்கு வழங்கி இருக்கின்றார்கள், கடந்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதற்காக எங்களுக்கு அதிகாரத்தை வழங்கி இருக்கின்றார்கள். ஜனாதிபதி உட்பட அமைச்சராக தெரிவு செய்யப்பட்ட நாங்களும் மக்கள் வழங்கிய வர பிரசாதத்தை நாங்கள் பெறுமதியை தெரிந்திருக்கின்றோம்.

இந்த மக்கள் வரமானது இனவாதத்திற்கு எதிராக வழங்கப்பட்ட மக்கள் வரம் மக்கள் வழங்கிய இந்த ஆணை ஊழலுக்கு எதிராக வழங்கிய ஆணை உலக நாடுகள் மத்தியில் எமது நாட்டிற்கு ஏற்பட்ட அசோகரிகளை தடுப்பதற்காக மக்கள் வழங்கிய இந்த ஆணை.

உங்களுக்கு தெரியும் நாங்கள் அனைவரும் கடந்த காலத்தில் பொருளாதார வீழ்ச்சியை எதிர்நோக்கினோம் எங்களுக்கு கிடைக்கப்பெற்றது.

ஒரு பொருளாதார வீழ்ச்சி அடைந்த நாடு மக்களுக்கு பொருளாதார ரீதியாக வீழ்ச்சி அடைந்த நாட்டையே எங்களுக்கு கையளித்தார்கள்.

மட்டக்களப்பு வாழைச்சேனையில் இருக்கின்ற கடதாசி உற்பத்தி சாலை உட்பட இந்த நாட்டில் இருக்கின்ற தொழிற்சாலைகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்ற ஒரு ஊழல் நிறைந்த ஆட்சியை தான் எங்களிடம் கையளித்தார்கள்.

நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம் மக்களின் அயராத உழைப்பும் அயராத தியாகத்தின் காரணமாக தற்போது பொருளாதாரத்தில் நாங்கள் அபிவிருத்தியை நோக்கி செல்லக்கூடிய விதத்தில் இருக்கின்றோம்.

பிச் ரேட்டிங் நிறுவனத்தின் மூலம் தொடர்ச்சியாக இந்த நாடு வந்திருத்து அடைந்த நாடு அல்ல அபிவிருத்தி ரீதியாக முன்னோக்கிச் செல்லுகின்ற நாடு என்கின்ற வகையில் அவர்கள் எங்களை அங்கீகரித்திருக்கின்றார்கள்.

பொருளாதார ரீதியாக வீழ்ச்சி அடைந்து இருக்கின்றோம் என கூறிய எதிர்க்கட்சியினரின் கருத்துக்களை மழுங்கடிக்க கூடிய வகையில் தற்போது பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைந்து வருகின்றோம் என்பதனை தற்போது காணக்கூடியதாக இருக்கின்றது.

சர்வதேச ரீதியாக எந்த அங்கீகாரம் கிடைத்தாலும் மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என நாங்கள் நினைக்கின்றோம். ஆகவே 2025 ஆம் ஆண்டு பிரதான வேலையாக இருக்கின்றது கிராமிய மட்ட கிராமிய பொருளாதாரங்களை வளர்ச்சி செய்வது எமது பிரதான வேலை திட்டமாக காணப்படுகின்றது.

இந்த அரசாங்கத்தால் கிராமிய மட்டத்தில் சுவையான ஒதுக்கீடுகளை செய்த போதும் கிராமிய மட்டத்தில் இருக்கின்ற மக்களின் பிரச்சினைகள் தீர்வதாக இல்லை அவர்களுக்கு இந்த ஒதுக்கீடு போய் சேராத காரணமாக காணப்படுகிறது .

இதனால் மக்களின் ஏழ்மைத்தனம் வேலை இல்லாத பிரச்சனை மக்களின் வாழ்வாதார நெருக்கடிகள் என்பது அதிகரித்து காணப்படுகின்றது. பொருளாதார வீழ்ச்சி காரணமாக இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள் ஆகவே அந்த பிரச்சினைகள் இன்னமும் தீர்ந்ததாக எங்களுக்கு தெரியவில்லை.

ஆகவே வீழ்ச்சி அடைந்த பொருளாதார முறைமைக்கு எதிராக புதியதொரு பொருளாதார கொள்கையை அமைப்பதற்கு தேசித்துள்ளோம்.அதில் முக்கியமாக காரணமாக இருப்பது மக்களின் கருத்துக்கள் இந்த பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கு மக்கள் பிரதிநிதிகளுக்கான அலுவலகங்கள் தேவைப்படுகின்றது.

அதனால் தான் இவ்வாறான காரியங்கள் திறக்கப்படுவது மக்களுக்கு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத்தான். தேர்தல் காலங்களில் வருகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் என்பதற்கு பதிலாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிழமையும் இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதி களை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம்.

ஒரு சாராரின் பிரச்சினைகளை கேட்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்ல.உயர்தரத்தில் அனைத்து மக்களின் பிரச்சினைகளை கேட்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களை நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம்.

இந்த காரியாலயம் திறக்கப்பட்டு இருப்பது பிரபு அவர்கள் சார்ந்தவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மாத்திரமல்ல அனைத்து மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் இந்த காரியாலயம் செயற்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்ச்சியாக நாங்கள் 2025 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா வேலை திட்டம் டிஜிட்டல் மயமாக்கல் வேலை திட்டம் அதே போன்று கிராமிய மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் போன்ற வேலை திட்டங்கள் போன்றவற்றை தொடர்ச்சியாக செய்வோம்.

ஒவ்வொரு வேலை திட்டங்களிலும் எங்களோடு இணைந்து கொள்ளும்படி அனைவரையும் அழைப்பு விடுக்கின்றோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண இலக்கிய விழா வெற்றியாளர்களுக்கு கௌரவிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் மாகாண இலக்கிய விழாவினை முன்னிட்டு இம் மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் சேவையாற்றும் கலை இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள உத்தியோகத்தர்களுக்கிடையே நடத்தப்பட்ட படைப்பாக்கப் போட்டிகளின்போது வெற்றியீட்டியவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர், சரவணமுத்து நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது பல்வேறுபட்ட துறைசார் உயர் அதிகாரிகள் இலக்கியத் துறை அதிதிகள் எனப் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மாகாண மட்டத்தில் புகைப்படக் கலைத் துறைப் போட்டியில் முதலாமிடம் பெற்ற அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஆசிரியராக சேவையாற்றி வரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிறை எப்.எம்.அறிவிப்பாளருமான றமீஸ் முதலாமிடம் பெற்றமைக்கான விருதினைப் பெற்றுக் கொண்டதுடன், புதுக்கவிதைப் போட்டியிலும் வெற்றி பெற்று பரிசில்களையும் பெற்றுக் கொண்டார்.




இலக்கியத் துறையில் அதிக ஈடுபாடு காட்டி வரும் இவர் அரச வானொலி விருது, மாகாண இளங்கலைஞர் விருது உள்ளிட்ட பல்வேறு தேசிய மற்றும் மாகாண விருதுகள் பலவற்றையும் பெற்றுள்ளார்.

# கிழக்கு மாகாணத்தில் புதுக்கவிதை துறையில் விபுலசசி முதலிடம்

(சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கான புதுக்கவிதைத்துறையில் காரைதீவைச் சேர்ந்த இளங்கவிஞர் விபுலசசி என அழைக்கப்படும் சசிப்பிரியன் முதலிடம் பெற்றுள்ளார்.

கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலையில் சிரேஸ்ட தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றிவரும் சசிப்பிரியன் ஏலவே பல விருதுகளைப் பெற்றவர்.

நேற்று களுதாவளையில் இடம்பெற்ற கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விருது விழாவில் முதலாமிடத்துக்கான விருது, சான்றிதழ் மற்றும் காசோலை என்பவற்றைப் பெற்றுக்கொண்டார்.




# மல்லியப்பு பேருந்து விபத்தில் உயிரிழந்தோரின் விவரங்கள்

(கிஷாந்தன்)

ஹட்டனில் இருந்து கண்டி நோக்கிபயணித்த தனியார் பேருந்து மல்லியப்பு என்ற இடத்தில் வீதியை விட்டு விலகி ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த மூவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தவிபத்தில்கண்டி புறநகர் பகுதியைச் சேர்ந்த அப்துல் உவைஸ் (68), ஹட்டன் தோட்டப் பகுதியைச் சேர்ந்த தேவராஜ் தினேஷ்குமார் (14), நோர்வூட் மேற்பிரிவு பகுதியைச் சேர்ந்த முத்துராக்கு (67) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

பஸ்ஸில்பயணித்த53பேர்காயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர், அவர்களில் ஏழு பேர் படுகாயமடைந்தநிலையில்கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். காயமடைந்த 43 பேர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் படுகாயமடைந்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பஸ்ஸின் சாரதி அட்டன் பொலிஸாரின் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் அட்டன் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

பஸ் சாரதி தனது கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டே பஸ்ஸை ஓட்டிச் சென்றார் எனவும், அதனாலேயே பஸ் சாரதிக்கு பஸ்ஸின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் விபத்து ஏற்பட்டது என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் அனுமதிக்கப்பட்ட ஆசனங்களைவிட மேலும் சில ஆசனங்கள் பொருத்துப்பட்டிருந்ததாக ஹட்டன் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டதுடன்,

விபத்துக்குள்ளான பேருந்து சனியிரவு ஹட்டன் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் மற்றும் மத்திய மாகாண வீதி போக்குவரத்து அதிகாரசபை அதிகாரிகள் இணைந்து வீதி விபத்துக்களை குறைக்கும் நோக்கில் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கான செயலமர்வு அண்மையில் ஹட்டன் பிரதேசத்தில் நடத்தியிருந்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

# கரைச்சி பிரதேச கலாசார விழா

''தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ற தலைப்பில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கரைச்சி பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் கரைச்சி பிரதேச செயலக 2024ம் ஆண்டுக்கான கலாசாரப்பெருவிழா கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் வேதநாயகம் கலந்து கொண்டார். விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் முரளீதரன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர். (113)





# சாய்ந்தமருது கடைகளில் சுகாதாரத்துறை வேட்டை

## சிக்கியோர் மீது சட்ட நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பிரிவுகளில் உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் திடீர் களப் பரிசோதனைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சகிலாவின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் மதன் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் அடங்கிய குழுவினர் இந்தத் திடீர் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நடவடிக்கையின்போது முறையற்ற வகையில் உணவு தயாரித்து பிடிபட்ட மூன்று நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதுடன் டெங்கு பரவும் வகையில் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருந்தவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த திடீர் களப் பரிசோதனையின்போது மூன்று ஹோட்டல்கள், ஒரு உணவகம், மரக்கறி விற்பனை நிலையங்கள் மற்றும் பழக்கடை போன்றனவும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தவும், ஆரோக்கியத்தைப் பேணவுமான தமது தொடரும் என்றும் மருத்துவர் மதன் தெரிவித்தார்.




காலைக்கதிர் Kalaikkathir

# நிதி வசதி ஒப்பந்த மூன்றாம் மீளாய்வின் இணக்கப்பாடுகள் குறித்து சர்வதேச நாணய நிதிய நிறைவேற்றுசபை ஆராய்வு

இலங்கையுடனான விரிவாக்கப்பட்ட நிதி வசதிகள் ஒப்பந்தத்தின் மூன்றாம் மீளாய்வின் போது எட்டப்பட்ட பணிக்குழாம் மட்ட இணக்கப்பாடுகள் தொடர்பாக, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை ஆராயவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் செய்தியாளர் சந்திப்பில் அதன் தொடர்பாடல் திணைக்கள பணிப்பாளர் ஜூலி கோசெக் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை, எதிர்வரும் மாதங்களில் கூடவிருக்கிறது.

இந்த ஆய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு நிறைவேற்றக்குழு அதற்கான அனுமதியை வழங்கியவுடன், இலங்கைக்கு மேலும் 333 மில்லியன் டொலர்கள் கொடுப்பனவு கிடைக்கப்பெறும். - என்றார்.

இதேவேளை, சர்வதேசநாணயநிதியத்துடனான மூன்றாவது மீளாய்வு கூட்டத்தின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு வரி சீர்த்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அண்மையில் நாடாளுமன்றில் வைத்து அறிவித்திருந்தார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது பதிலளித்த ஜூலி கோசெக், குறித்த இந்த விடயங்களும் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையில் முன்வைக்கப் படவுள்ள மீளாய்வு அறிக்கையில் உள்ளடக்கப் படும். - என்றார்.

# பாலர் பாடசாலை கலை விழா

(சியாஜ்)

கற்பிட்டி ஆபத்தொழி மஸஜிதுல் றஹ்மான் பாலர் பாடசாலையின் பத்தாவது வருடாந்த கலை விழா நிகழ்வுகள் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பாலர் பாடசாலையின் தலைவர் இக்மால் தலைமையில் இடம்பெற்றது

இந் நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி நகரின் ஏனைய பாலர் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பாலர் பாடசாலை மாணவர்களின் இஸ்லாமிய மற்றும் கலை ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் மஸ்ஜிதுல் றஹ்மான் பாலர் பாடசாலை ஆசிரியர்களான எம்.எஸ் சஜானஸ், எம்.ஐ.எப் சஹானா மற்றும் எம்.எஸ் றிப்னத் ஆகியோரின் முயற்சியினால் பெற்றோர்களின் பங்களிப்புடன் சிறப்பாக இடம்பெற்றதுடன் பங்கு பற்றிய சகல மாணவர்களுங்கும் பரிசுப் பொருட்கள், சான்றிதழ்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



தூய அன்னை சாரதா தேவியாரின் 172ஆவது ஜயந்தி விழா இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு ஆச்சிரமத்தில் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் நேற்றுக் காலை நடைபெற்ற போது....

(படங்கள் சகாதேவராஜா)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2024இல் வெளியிடப்பெற்றது